# 2020–ம் ஆண்டு மே மாதம் 29ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 05.00 மணிக்கு கொமாரபாளையம் நகராட்சி சாதாரணக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

**முன்னிலை:– திரு.சி.ஸ்டான்லி பாபு, இ.கலை., அவர்கள். தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர்**

**பொருள் எண்.1**

ஆணையாளர் அவர்களின் மே – 2020ம் மாதத்திய நாட்குறிப்பினை கூட்டத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 191 நாள் 29.05.2020
பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் மே – 2020ம் மாதத்திய நாட்குறிப்பினை கூட்டத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பதிவு செய்யலாம்.
தீர்மானம் எண் 192 நாள் 29.05.2020
பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.3**

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம், சேலம் அவர்களின் ந.க.எண்.774/2020/சேம–3 நாள்.20.03.2020ஆம் தேதிய கடிதத்தில் கொமாரபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் அய்யம்பாளையம் அக்ரஹாரம் கிராமம் சர்வே வார்டு A, பிளாக் எண் 2, நகரளவை எண் 12/2Bஇல் 0.981/2 ஏக்கர் பரப்பில் ஒப்புதல் பெறப்பட்ட கொமாரபாளையம் முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோக பகுதியில் இருந்து கலப்பு குடியிருப்பு நில உபயோக பகுதியாக மாற்றம் செய்து உள்ளாட்சி மன்றத்தில் ஒப்புதல் பெற்றும் மற்றும் உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மானம் இயற்றியும் அனுப்பி வைக்குமாறு தெரிவித்துள்ளார்கள்.

மேற்கண்ட இடத்தினை விவசாய நில உபயோக பகுதியில் இருந்து கலப்பு குடியிருப்பு நில உபயோக பகுதியக ( Changes of land use agricultural land use zone into mixed residential use zone) மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்
தீர்மானம் எண் 193 நாள் 29.05.2020

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.4</u>**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 20.05.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **<u>குடிநீர் நிதிப் பணிகள்</u>** | | | |
| 1. | வார்டு எண்.17 சிவசக்தி நகர், வார்டு எண்.19 காட்டுவலவு, வார்டு எண்.20 பூங்கொடி மில் ரோடு, வார்டு எண்.23 ராஜவிநாயகர் கோவில் வீதி மற்றும் ராஜவிநாயகர் கோவில் குறுக்கு வீதிகள் ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள PVC பகிர்மானக் குழாய்களை அகற்றிவிட்டு புதியதாக HDPE பகிர்மானக் குழாய்கள் அமைத்து தண்ணீர் வசதி செய்தல். | 9,50,000/— | திரு.கே.எஸ்.மாரியப்பன்<br><br>திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.32 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட **1.33 %** அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.32 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திரு.கே.எஸ்.மாரியப்பன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.165 நாள்.30.04.2020 ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 194 நாள் 29.05.2020
திரு.கே.எஸ்.மாரியப்பன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கப்பட்டது.

**<u>பொருள் எண்.5</u>**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 20.05.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **<u>குடிநீர் நிதிப் பணிகள்</u>** | | | |
| 1. | சுந்தரம் காலனி மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வளாகத்தினுள் புதிதாக வடிகால் கட்டி, வளாகம் முழுவதும் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி. | 5,70,000/— | திரு.கே.எஸ்.மாரியப்பன்<br><br>திருவாளர்கள். எஸ்.ஏ.சக்கரபாணி | மதிப்பீட்டுத் தொகையினைவிட **0.17 %** குறைவு.<br><br>மதிப்பீட்டுத் தொகையினைவிட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அன்ட் சன் | **0.65 %** அதிகம். |

அலுவலகக் குறிப்பு

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 0.17 சதவீதம் குறைவான தொகை கொடுத்துள்ள திரு.கே.எஸ்.மாரியப்பன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தீர்மான எண்.181 நாள்.30.04.2020 ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 195 நாள் 29.05.2020
திரு.கே.எஸ்.மாரியப்பன் என்ற ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கப்பட்டது.

**பொருள் எண்.6**

கொமாரபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு எண்.30 கலைமகள் தெருவில் உள்ள மயான வளாகத்தில் கட்டப்பட்டுள்ள தகன உலை எரிவாயு மயான கட்டிடத்தின் மூலம் இறந்தவர்களின் உடலை எரித்து பராமரிக்கவும், பொது சேவை பணியினை தங்களது டிரஸ்டி மூலம் மேற்கொள்ளவும், தகன உலை எரிவாயு கட்டிடத்தினை 15.06.2019 முதல் 14.06.2020 வரை ரோட்டரி சங்கம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேலும், இப்பராமரிப்பு பணி காலமானது 14.06.2020 உடன் முடிவடைவதால் ரோட்டரி சங்கம் கொமாரபாளையம் மேலும் ஓர் ஆண்டு காலம் புதுப்பித்து தருமாறு 5.5.2020ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். எனவே, மேற்கண்ட தகன உலை எரிவாயு மயானத்தை மேலும் 1 ஆண்டு காலம் 15.06.2020 முதல் 14.06.2021 வரை புதுப்பிக்க மேற்கண்ட ரோட்டரி சங்க நிறுவனத்திற்கு (அதே கட்டண விகிதத்தில்) பராமரிக்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1 கட்டிமுடிக்கப்பட்ட எரிவுாயு தகன மேடை பராமரிப்பிற்கு தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு நகராட்சியின் மன்ற அனுமதி பெற்று வழங்கலாம். குத்தகைக்கு விடக்கூடாது.
2 எரிவாயு மயானம் காரியங்கள், இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்தக்காரியங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தக்கூடாது. எந்த சட்டவிரோத நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெற அனுமதிக்ககூடாது.
3 ஒலி, ஒளி பெருக்கிகளை அறக்கட்டளை / நிறுவனம் பயன்படுத்தக்கூடாது. இந்த இடத்தை பயன்படுத்துவது சம்மந்தமான சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் வகுக்கும் விதிமுறைகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இதர சட்ட விதிமுறைகளுக்கும் அறக்கட்டளை /நிறுவனம் கட்டுப்பட வேண்டும்.
4 மேற்படி இடத்திலுள்ள பொருட்கள் ஏதேனும் களவாடப்பட்டிருப்பின் அல்லது எந்த வகையிலும் சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு பராமரிப்பு நிறுவனமே பொறுப்பாகும்.
5 எரியூட்டும் இயந்திர புகைப் போக்கிகள், புகை வெளியேறுவதால் சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காதவகையில் தக்க உயரத்திலும், மாசுக்கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின்படி பராமரிக்கப்படவேண்டும்.
6 மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி தேவைப்படுமென கருதும் பட்சத்தில் மேற்படி அனுமதி மற்றும் தடையில்லா சான்று உள்ளாட்சி சொந்தபொறுப்பில் பெற்றுத் தரப்படும்.
7 நவீன மயானத்தை பயன்படுத்துவோர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை மன்ற தலைவர்/ஆணையாளர்/ சுகாதாரப்பிரிவு அதிகாரி மற்றும் நிறுவனத்தை சார்ந்த ஒருவர் கொண்ட குழு ஒவ்வொரு வருடமும் நிர்ணயிக்கும். இக்கட்டணம், இலாப நோக்கமின்றி செலவுகளை சரிகட்டும் விதமாக நிர்ணயிக்கப்படும்.

8 ஜாதி மத இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பொது எரிவாயு மயானமாக பயன்படுத்திடவேண்டும்.

9 எரிவாயு மயானத்தை சுற்றி தோட்டம் அமைத்தல், செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல், காவல்அரண் அமைத்தல் மற்றும் மயானத்தை சுற்றி மதில் சுவர் எழுப்புதல் ஆகிய செலவினங்களை தனியார் அறக்கட்டளை /நிறுவனம் ஏற்கவேண்டும்.

10 எரிவாயு மயானத்தில் அறக்கட்டளை/ நிறுவனம் எந்தவித கூரை வேய்ந்த கட்டிடமோ அல்லது எளிதில் தீப்பற்றகூடிய பொருட்கள் கொண்ட கூரையோ கண்டிப்பாக அமைக்கப்படக்கூடாது

11 எரியூட்டும் சடலம் தொடர்பாக பின்னாளில் எழும் சட்டபிரச்சனைகளுக்கு நிறுவனமே பொறுப்பேற்க வேண்டும்.

12 பராமரிப்பு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து 1 வருட காலத்திற்கு மட்டும் எரிவாயு மயான பராமரிப்பு அறக்கட்டளை/ தனியார் நிறுவனம் பராமரிக்க அனுமதிக்கப்படும். கால நீட்டிப்பு தேவைப்படின் ஆறுமாதகாலத்திற்கு முன்பாகவே சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் விண்ணப்பிக்கப்பட வேண்டும். இந்த விண்ணப்பத்தினை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் புதுப்பித்து/ நிராகரித்து ஆணைப்பிறப்பிக்கப்படும்.

13 பராமரிக்க ஒப்படைக்கப்பட்ட பிறகு கூடுதல் கட்டுமானம் ஏதும் தேவைப்படின் உள்ளாட்சியின் அனுமதி பெற்ற வேலைகள் செயல்படுத்தவேண்டும்.பராமரிப்பு அனுமதி முடிந்த பிறகு திருப்பி ஒப்படைக்கும் பொழுது இதற்கு எந்தவித இழப்பீடும் உள்ளாட்சி வழங்காது.

14 அறக்கட்டளை/ நிறுவனத்தினர் பராமரிப்பை நிறுத்திக் கொள்ள விரும்பினால் நகராட்சிக்கு ஆறு மாத காலத்திற்கு முன்பே அறிவிப்பு முறையாக வழங்க வேண்டும்.

15 பராமரிப்பு அனுமதியை புதுப்பிப்பதும், மறுப்பதும் உள்ளாட்சியின் முடிவை பொறுத்தது. அனுமதி மறுக்கப்பட்டால் சம்மந்தப்பட்ட தனியார் அறக்கட்டளை/ தனியார் நிறுவனங்கள் நிறுவிய அனைத்து கூடுதல் உபகரணங்கள்/ கட்டடங்களுக்கு எந்தவித இழப்பீடும் கோராமல் உள்ளாட்சி நிறுவனத்திற்கு ஒப்படைக்க வேண்டும்.

16 எரிவாயு மயானம் அமைக்க உரிமம் பெற்ற தனியார் நிறுவனம்/ அறக்கட்டளை இறந்தவரின் பெயர், தகப்பனார்/ தாயார் பெயர், வயது, முகவரி, எரிவாயு மயானம் பயன்படுத்தப்பட்ட நாள் மற்றும் நேரம், பெறப்பட்ட தொகை முதலிய விபரங்கள் அடங்கிய பதிவேட்டினை பராமரிக்க வேண்டும்.

17 மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும் சம்மதித்து ஒப்பந்தப்பத்திரம் உள்ளாட்சிக்கு அறக்கட்டளை/ நிறுவனம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

18 மேலே உள்ள நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையாவது மீறப்பட்டாலும் வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும்.

19 சடலங்களை எடுத்து செல்லும் வழியில் மற்றும் அப்பகுதியில் மலர்களை தூவி பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது.

20 எரியூட்டு மயானத்திற்கு வரும் சடலங்களுக்கு இந்நகராட்சியின் மூலம் நிர்ணயிக்கப்பட்டதை விட அதிகம் வசூலிக்கக் கூடாது.

21 எரியூட்டப்படும் சடலம் ஒன்றுக்கு வசூல் செய்யப்படும் தொகை ரூ.1500/–ல் 10 சதவீதம் ரூ.150/– என்ற அடிப்படையில் மாத இறுதியில் மொத்த சடலங்களை கணக்கிட்டு அதற்குண்டான தொகையினை பிரதி மாதம் 5ம் தேதிக்குள் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும்.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட தகன உலை எரிவாயு மயானத்தை மேலும் 1 ஆண்டு காலம் புதுப்பிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண்.33583/2007/பி3, நாள்.2.12.2008ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட கட்டண விகிதம் ரூ.1500/– வீதம் நிர்ணயம் செய்து 1 ஆண்டு காலம் பராமரிக்கவும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 196 நாள் 29.05.2020
அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

கொமாரபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட அரசு மேல்நிலைப்பள்ளி சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக ஆக்கிரமிப்புதாரர்களுக்கு அறிவிப்பு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. இவ்வறிப்பு பெற்றுக்கொண்டு திருச்செங்கோடு மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் கீழ்கண்ட நபர்கள் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

| வ.எண். | வழக்கு தொடங்கப்பட்ட பெயர் | வழக்கு எண். |
|---|---|---|
| 1. | திருமதி. பாவாயி | OS.25/2012 |
| 2. | திரு. நாட்ராயன் மற்றும் பலர் | OS.367/2012 |
| 3. | திரு. துரைசாமி | OS.42/2013 |
| 4. | திருமதி. கிருஷ்ணவேணி | OS.181 / 2013 |
| 5. | திருமதி. ராஜேஸ்வரி | OS.183 / 2013 |
| 6. | திரு. வேலுசாமி | OS.185/2013 |
| 7. | திரு. செங்கோடன் | OS.197/2013 |
| 8. | திரு. ராஜாகவுண்டன் | OS.198/2013 |
| 9. | திருமதி. செல்லப்பன் | OS.199/2013 |
| 10. | திருமதி. செல்லம்மாள் | OS.200/2013 |
| 11. | திரு.அப்துல்ஹாவுஸ் | OS.208/2013 |
| 12. | திரு.அப்துல்ஹாவுஸ் | OS.210/2013 |
| 13. | திரு. பெருமாள் | OS.41/2016 |

மேற்காணும் வழக்குகளை நகராட்சி ஆணையாளர் அவர்களின் சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.பி. இராமலிங்கம் அவர்களை கொண்டு வழக்குகளை நடத்தப்பட்டு வருகிறது. நகராட்சி வழக்கறிஞர் அவர்கள் பதில் அறிக்கை தாக்கல் செய்தும் நீதிமன்றங்களில் அவ்போது கேட்டுக்கும் ஆவணங்கள் சமர்ப்பிக்கவும் பத்தி வாரியான அறிக்கை, தட்டச்சு மற்றும் நீதிமன்ற வில்லைகள், வழக்கு கட்டணம் ஆகியவைகளை சேர்த்து ரூ. 25500/– வழங்க கோரியதின்பேரில் ரூ.25500/– யை 14.11.2017 ம் தேதியில் தொகை வழக்கப்பட்டது.

மேலே தெரிவிக்கப்பட்ட ஒவ்வொரு வழக்கிற்கும் வாதி அவர்கள் பத்துக்குமேலான இடைகால மனு தாக்கல் செய்யப்பட்டதற்கு பதில் மனு அனைத்திற்கும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

மேலும் ஒவ்வொரு வழக்கிற்கும் கூடுதல் அறிக்கை தேவைப்பட்டதால் அனைத்திற்கும் கூடுதல் அறிக்கை தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதால் அதற்கான வழக்கு கட்டணம் ரூ.24000/– ம் 12.12.2018 ல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது எட்டு வழக்குகளுக்கு நகராட்சிக்கு சாதமாக தீர்ப்பு வரப்பெற்றுள்ளது. மூன்று வழக்குகளுக்கு முடிவுறும் நிலையில் உள்ளது.

எனவே, வழக்கறிஞர் அவர்கள் கீழ்கண்ட ஒவ்வொரு வழக்கிற்கும் வழக்கு கட்டணம் வழங்க பட்டியல் கொடுத்துள்ளார்.

| வ.எண். | வழக்கு தொடங்கப்பட்ட பெயர் | வழக்கு எண். | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திருமதி. பாவாயி | OS.25/2012 | 6000 |
| 2. | திரு. நாட்ராயன் மற்றும் பலர் | OS.367/2012 | 6000 |
| 3. | திருமதி. கிருஷ்ணவேணி | OS.181 / 2013 | 6000 |
| 4. | திருமதி. ராஜேஸ்வரி | OS.183 / 2013 | 6000 |
| 5. | திரு. வேலுசாமி | OS.185/2013 | 6000 |
| 6. | திரு. செங்கோடன் | OS.197/2013 | 6000 |
| 7. | திரு. ராஜாகவுண்டன் | OS.198/2013 | 6000 |
| 8. | திருமதி. செல்லப்பன் | OS.199/2013 | 6000 |
| 9. | திருமதி. செல்லம்மாள் | OS.200/2013 | 6000 |
| 10. | திரு.அப்துல்ஹாவுஸ் | OS.208/2013 | 6000 |
| 11. | திரு.அப்துல்ஹாவுஸ் | OS.210/2013 | 6000 |
| | | மொத்தம் | 66000 |

மேற்படி வழக்கிற்கு வழக்கு கட்டணம் ரூ.66000/–ம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.
தீர்மானம் எண் 197 நாள் 29.05.2020
அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

கொமாரபாளையம் நகராட்சியில் தற்போது கொரோனா நோய்தடுப்பு COVID – 19 நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக நகராாடசி எல்லைக்குட்பட்ட அனைத்து வீதிகளிலும் Sodium Hypo Chloride Solution என்றும் கிருமி நாசினியை தண்ணீருடன் கலந்து நகராட்சி வாகனம் மூலம் மதினசரி 300 லிட்டர் வீதிம் தெளிக்கப்பட்டு வருகிறது. தற்போது Sodium Hypo Chloride Solution இருப்பு குறைவாக இருப்பதால் மேலும் 7500 லிட்டர் கொள்முதல் செய்ய ஆகும் செலவினத்தொகை ரூ.1,50,000/- க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் மேற்கண்ட பணி பொதுமக்களின் சுகாதாரப் பணியாக இருப்பதாலும் தற்போது கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வருவதாலும் மேற்கண்ட பணியுடன் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதாக உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணியினை மேற்கொள்ள 2020 தேதி அன்று விலைப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படிக்கு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதையும் கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | M/s Rakshita Chemicals and Traders Erode | ரூ. | 19.45 Cach Relists |
| 2 | M/s M.R.Dyesal Chemicals Erode | ரூ. | 20.75 Cach Relists |
| 3 | M/s Sundaran Chemicals Agencies Mettur Dam Salem Dt. | ரூ. | 25.75 Cach Relists |

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட பணிக்கான உத்தேச செலவினம் ரூ.1,50,000/- க்கு அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணியானது பொதுமக்களின் சுகாதார பிரச்சனையாக இருப்பதாலும் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக பணியினை செய்ய வேண்டி உள்ளதால் நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பணியினை மேற்கொள்ளவும், பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வ.எண்.1 –ல் கண்டுள்ள M/s ரக்ஷிதா கெமிக்கல்ஸ் & டிரேடர்ஸ், ஈரோடு என்பவரின் குறைந்த விலைப்புள்ளிகளை ஏற்று பணி உத்திரவு மற்றும் பட்டியல் தொகை வழங்கியமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 198 நாள் 29.05.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

கொமாரபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.2 – ல் உள்ள செல்லவேல் மண்டபவீதி கடைசி பகுதி மற்றும் ராஜராஜன் நகர் போலீஸ்காரர் லைன்வீடு அருகில் மற்றும் உழவர் சந்தை அருகில் வடபுறம் கிழக்கே செல்லும் வீதி மற்றும் நகராட்சிக்கு சேர்ந்த உடற்பயிற்சி நிலையம் அருகில் மற்றும் அதே கிழக்கே செல்லும் வீதியின் கடைசியில் என 4 தெரு விளக்குகள் அமைத்து தர கோரி விண்ணப்பிக்கப்பட்டதில் கேட்பு தொகை ரூ.16,887/- ஐ செலுத்த வேண்டும் என இளநிலை பொறியாளர்

இளநிலை பகிர்மான தமிழ்நாடு உயர்மின் மற்றும் பகிர்மான கழகம் சி.என்.பாளையம் பிரிவு கொமாரபாளையம் என்பவர் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை செலுத்த ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.16887/- ஐ செலுத்தியமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 199 நாள் 29.05.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

இந்நகராட்சி பேருந்து நிலையத்தின் மேற்கூரைப் பகுதியில் மேல் தளத்தில் பதிக்கப்பட்டுள்ள Pressed tiles பழுது ஏற்பட்டுள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் மேற்கூரைகளில் இறங்கி மேற்கூரை பழுது ஏற்பட்டுள்ளது. மேற்கூரைக்கு மேல் உள்ள டம்மி காலம் பழுது ஏற்பட்டுள்ளதால் கட்டிடம் ஸ்திரத் தன்மை குறைய வாய்ப்புள்ளது. இப்பழுதுகளை உடனடியாக சரி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், பேருந்து நிலையத்தின் நுழைவுப் பகுதியில் உள்ள பெயர் பலகை பொலிவிழந்து உள்ளதால், பெயர் பலகையினையும் புதுப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்படி பணிகளை செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.6,70,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.6,70,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 200 நாள் 29.05.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

இந்நகராட்சி அலுவலகத்தில் முதல் தளத்தில் உள்ள கழிப்பிடத்தினை இடித்து அலுவலக அறையாக மாற்றுதல், மாடி படி பகுதியில் மழைக்காலங்களில் மழைநீர் வடிந்து அலுவலகத்தின் உட்புறம் வருவதால் மாடி படியில் பராமரிப்பு பணிகள் செய்தல், ஏற்கனவே உள்ள கதவுகள் நிர்வாக வசதிக்காக மாற்றியமைத்தல், ஓட்டுனர்களுக்கு புதியதாக அறை கட்டுதல், அனைத்து இருக்கைகளுக்கும் Wall mounted Fan பொருத்துதல், அலுவலகத்தில் தேவையான அறைகளுக்கு வர்ணம் பூசுதல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, நிர்வாக வசதிக்கேற்ப மேற்படி பணிகள் அனைத்தும் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.9,95,000/–க்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.9,95,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 201 நாள் 29.05.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2017–18–ன் கீழ் இரண்டு நுண் உரம் செயலாக்க மையம் வாரச்சந்தை வளாகம் மற்றும் மணிமேகலைத் தெருவில் கட்டப்பட்டு சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இவ்விரண்டு மையங்களிலும், கன்வேயர் மெஷின்கள் வைக்கப்பட்டு நகராட்சி பகுதிகளில் பெறப்படும் குப்பைகள் இம்மெஷின்கள் மூலம் பிரித்து பின்னர் அரைக்கப்பட்டு உரம் தயாரிக்க பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்நிலையில், இரண்டு மையங்களில் ஒன்றான வாரச்சந்தையில் அமைந்துள்ள மையத்தில் உள்ள கன்வேயர் மெஷினில் உள்ள பெல்ட் அறுந்து விட்டதால், இயந்திரத்தினை மேற்கொண்டு இயக்க இயலாமல், குப்பைகளை அரைக்க முடியாததால் சுற்றுப்புற சூழல் மாசு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அறுபட்டுள்ள Conveyor பெல்ட்டுக்கு பதிலாக புதிய பெல்ட் வாங்கிப் பொருத்தி மீண்டும் இயந்திரத்தினை இயக்கத்தில் வைக்க ஆகும் செலவினம் ரூ.35,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. உத்தேச செலவினம் ரூ.35,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
   தீர்மானம் எண் 202 நாள் 29.05.2020
   அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

கொமாரபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண். TN34 D 6226 வாகனத்திற்கு மின்கலம் பொருத்தப்பட்டு சுமார் மூன்று ஆண்டு காலம் ஆகிவிட்டதாக, தற்சமயம் மின்கலம் பழுதடைந்து விட்டதாகவும், இதனால் வாகனத்தை இயங்க சிரமமாக உள்ளதாகவும். இந்நகராட்சி ஓட்டுநர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்தின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு குறித்து புதிய மின்கலம் வாங்கி பொருத்த ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.9000/- த்தை தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி வழங்கலம்.
2. மேற்கண்ட வாகனத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று புதிய மின்கலம் வாங்கும் பணியை மேற்கொள்ள கொரோனா Covid – 19 தடுப்பு நடவடிக்கைக்காக ஊரடங்கு அமலில் உள்ளதால் உள்ளூர் நிறுவனத்தாரிடமிருந்து விலைப்புள்ளி பெற்று பணியை மேற்கொண்டமைக்கும் அதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொண்டமைக்கும் அனுமதி வழங்கலாம்.

   தீர்மானம் எண் 203 நாள் 29.05.2020
   அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

கொமாரபாளையம் நகராட்சிக்குட்பட்ட வாாடு எண்.28 காளியம்மன் கோவில் அருகிலும் வார்டு எண்.27 திருவள்ளுவர் வீதியிலும் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு அருகிலேயே மோட்டார் அறையுடன் கூடிய தொட்டிகள் அமைக்கப்பட்டு அப்பகுதி மக்களுக்க குடிநீர் அல்லாத தண்ணீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கொள்ள இரு மோட்டாாாகளும் பழுதடைந்து தண்ணீரை தொட்டிக்கு ஏற்ற முடியாத நிலை ஏற்பட்டது. இதன்காரணமாக இரு மோட்டார்களையும் ஆழ்துளை கிணற்றில் இருந்து வெளியே எடுத்து பரிசோதிக்க முற்பட்ட போது, அருகில் உள்ள மரத்தின்

வேர்கள் ஆழ்துளை கிணற்றில் புகுந்துவிட்டதால், மோட்டார்களை வெளியே எடுக்க இயலவில்லை இதனால் இரு ஆழ்துளை கிணற்றையும் Flushing செய்துது மோட்டார்களை மேலே அடுத்து பழுது நீக்கம் செய்து மீண்டும் பயன்பாட்டில் விட ஆகும் செலவினம் ரூ.87000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் மேற்கண்ட பணியானது பொது மக்களின் குடிநீர் அல்லாத தண்ணீர் தேவைகளை இருப்பதாலும் மேற்கண்ட பணியினை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணியினை மேற்கொள்ள 26.05.2020ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவிபரப்படிக்கு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனி அலுவலரின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1) திரு.K. தனபாலன் ஈரோடு ரூ. 86300/-
2) M/s. பிரைட் டெக்னாலஜி ஈரோடு ரூ. 86680/-
3) M/s. கோகுல் என்ஜினியரிங் பவானி ரூ.86960/-

அலுவலக குறிப்பு

1) மேற்கண்ட பணிக்கான உத்தேச செலவினம் ரூ.87000/- அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
3) மேற்கண்ட பணியானது பொதுமக்களின் அன்றாட தேவையான குடிநீர் அல்லாத தண்ணீர் தேவைக்கான பணியினை இருப்பதால், மேற்படி பணியின் அவசர அவசிம் கருதி உடனடியாக பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 - ன் கீழ் பணியினை மேற்கொள்ளவும், மேலும் பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்.(1) ல் கண்டுள்ள திரு.K. தனபாலன் ஈரோடு என்பவரில் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு மற்றும் பட்டியல் தொகை வழங்கியமைக்கும் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண் 204 நாள் 29.05.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.15</u>**

கொமாரபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 கருப்புசாமி நகர் வீதியில் உள்ள குடியிருப்புகளுக்கு 250mm AC குழாய்கள் மூலம் சுந்ரம் காலனியில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் B.Ed. கல்லூரி அருகில் உள்ள 10 லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து வார்டு எண்.12 அபெக்ஸ் காலனி பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு 350mm AC குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கொள்ள 250mm மற்றும் 350mm AC குழாய்கள் இரண்டும் உயர்மின் அழுத்தம் காரணமாக உடைந்ததால் அப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் முற்றிலும் தடைபட்டது. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக இரண்டு இடங்களிலும் குழாய்களை கீழ்கண்டவாறு மாற்றி அனைத்து குடிநீர் விநியோகத்தினை சீர் செய்ய ஆகும் செலவினம் ரூ.41,000/- க்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் மேற்கண்ட பணியானது பொதுமக்களின் குடிநீர் தேவையாக இருப்பதாலும் மேற்கண்ட பணியினை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணியினை மேற்கொள்ள 20.05.2020 ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

1) திரு.M.அப்புசாமி பவானி ரூ.40474/-
2) திரு.K.S. மாரியப்பன் கு.க.மேடு ரூ.41500
3) M/s. S.A. சக்ரபாணி & சன் பவானி ரூ.42150/-

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மேற்கண்ட பணிக்கான உத்தேச செலவினம் ரூ. அனுமதி அளிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3) மேற்கண்ட பணியானது பொதுமக்களின் அன்றாட தேவையான குடிநீர் பணியாக இருப்பதால் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணியினை மேற்கொள்ளவும், மேலும் பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்.(1)ல் கண்டுள்ள திரு.M.அப்புசாமி பவானி என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு மற்றும் பட்டியல் தொகை வழங்கியமைக்கும் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண் 205 நாள் 29.05.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.16**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 அம்மன் நகர்–நாராயண நகர் பிரதான சாலையில் (திருப்பதி மணல் ஆபிஸ் அருகில்) செல்லும் A.C.பகிர்மானக் குழாய் பழுதடைந்து குடிநீர் அதிகளவில் வீணாகி வந்ததையடுத்து அவற்றினை அகற்றிவிட்டு புதிதாக D.I.குழாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில், பிரதான சாலையில் பதிக்கப்பட்டு வரும் D.I.குழாயுடன், நேரு வீதி, பட்டாளத்தார் வீதி மற்றும் பழைய எல்லைமாரியம்மன் கோவில் ஆகிய குறுக்கு வீதிகளுக்கு செல்லும் குழாய்களுடன் இணைக்கும் பொருட்டு அதற்குத் தேவையான D.I.Tee, Sluice valve ஆகிய பொருட்களை வாங்கிப் பொருத்தவும், வால்வு தொட்டிகள் கட்டவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2,30,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.2,30,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 206 நாள் 29.05.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள 5.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியில் இருந்து வார்டு எண்.22 பாலக்கரை வரை குடிநீர் பகிர்மானக் குழாய் பதிக்கப்பட்டு பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்நிலையில் பகிர்மானக் குழாய் பதிக்கப்பட்டுள்ள அங்காளம்மன்கோவில் வீதி, கலைமகள் வீதி, திரு.வி.க.வீதி, ராஜா வீதி, திருவள்ளுவர் வீதி, புத்தர் வீதி பகுதிகளுக்கு செல்லும் கிளை பகிர்மானக் குழாய்களுடன் இணைக்கும் பொருட்டு அதற்கு தேவைப்படும் D.I.Tee, Sluice Valve, Air Valve போன்ற உதிரி பாகங்கள் வாங்கிப் பொருத்தவும், ஒன்பது இடங்களில் வால்வு தொட்டிகள் கட்டவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5,60,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.5,60,000/–க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 207 நாள் 29.05.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 கம்பன் நகர் மற்றும் வாசுகி நகர், வார்டு எண்.17 சிவசக்தி நகர், வார்டு எண்.28 கம்பர் தெரு மற்றும் திரு.வி.க.சாலை ஆகிய பகுதிகளில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு அருகிலேயே மோட்டார் அறையுடன் கூடிய தொட்டி கட்டப்பட்டு பொது மக்களுக்கு

குடிநீரல்லாத தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் அப்பகுதிவாழ் பொது மக்கள், தங்கள் வீடு அமைந்துள்ள பகுதிகளில் தண்ணீர் குழாய் நீட்டிப்பு செய்து தருமாறு கோரிக்கை அளித்ததையடுத்து, மேற்சொன்ன பகுதிகளில் குடிநீரல்லாத தேவைக்கான குழாய்கள் அமைக்கவும், வார்டு எண்.3 சந்தைப்பேட்டை வளாகத்தில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து லாரிகளில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஏதுவாக குழாய்கள் அமைக்கவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5,30,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.5,30,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 208 நாள் 29.05.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.19**

இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் நீர்தேக்கத் தொட்டிகளில் உள்ள தண்ணீர் குழாய்கள் மற்றும் பொது குடிநீர் குழாய்கள் தொடர்ச்சியான உபயோகத்தின் காரணமாக அடிக்கடி பழுது ஏற்படுகிறது. பழுதான UPVC குழாய்கள் அதன் உதிரி பாகங்கள், G.I.குழாய்கள் அதன் உதிரி பாகங்கள் மற்றும் PVC குழாய்கள் அதன் உதிரி பாகங்கள் வாங்குவதற்கு ஒவ்வொரு முறையும் வெளி சந்தைகளில் விலைப்புள்ளிகள் பெற மன்ற அனுமதி அவசியமாகிறது. இதன் காரணமாக பழுதினை சரிசெய்ய காலதாமதம் ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு புதியதாக UPVC குழாய்கள் அதன் உதிரி பாகங்கள், G.I.குழாய்கள் அதன் உதிரி பாகங்கள் மற்றும் PVC குழாய்கள் அதன் உதிரி பாகங்கள் வாங்கி இருப்பு வைத்துக் கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3,95,000/—க்கு கூட்டத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.3,95,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 209 நாள் 29.05.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.20**

இந்நகராட்சியில் பெறப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை அரைத்து தார் சாலை அமைக்கும் பணிகளுக்கு பயன்படுத்தும் பொருட்டு, பிளாஸ்டிக் Shredder மெஷின் ஒன்று வாங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில், மேற்சொன்ன இயந்திரம் திடீரென பழுதாகிவிட்டதால், பிளாஸ்டிக் கழிவுகளை அரைப்பது தடைபட்டுள்ளது. எனவே, பழுதடைந்துள்ள பிளாஸ்டிக் அரைக்கும் இயந்திரத்தினை பழுது நீக்கி மீண்டும் பயன்பாட்டில் வைக்க ஆகும் செலவினம் ரூ.42,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. செலவினம் ரூ.42,000/—க்கு அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 210 நாள் 29.05.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.21**

கொமாரபாளையம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய 06.05.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் முதல் அழைப்பில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கூட்டத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப் பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு சதவீதம் குறைவு / கூடுதல் |
|---|---|---|---|---|
| | **பொது நிதிப் பணிகள்** | | | |
| 1. | கொமாரபாளையம் நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள அம்மா உணவகத்தின் உணவருந்தும் அறையை விரிவாக்கம் செய்யும் பணி. | 17,70,000/– | திரு.பி.சின்னண்ணன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **4.97 %** அதிகம். |
| | | | திரு. சி.லோகநாதன் | மதிப்பீட்டுத் தொகையினைவிட **6.36 %** அதிகம். |

**அலுவலகக் குறிப்பு**

முதல் அழைப்பில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையைவிட 4.97 சதவீதம் அதிகமான தொகை கொடுத்துள்ள திருபி.சின்னண்ணன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேற்காணும் பணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி நாள்.11.04.2020ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 211 நாள் 29.05.2020
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.22**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 136 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மற்றும் 65 ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் மற்றும் 40 டி.பி.சி. பணியாளர்கள் மற்றும் 25 ஒப்பந்த குடிநீர் பணியாளர்க. பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி பணியாளர்கள் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகளில் ஈடுபடும்போது தகுந்த பாதுகாப்பு உபகரணங்கள் அணிந்து கொண்டு மட்டுமே பணிபுரிய வேண்டும் எனவும், அப்பணியாளர்களுக்கு நகராட்சியின் மூலமாக வழுங்கப்பட வேண்டும் எனவும் போதுமான அளவில் இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண். 5437/ஜே2/2020-15 நாள். 17.04.2020 என்ற கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பொது சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொ.டு அவசர அவசியம் கருதி பாதுகாப்பு உபகரணங்களான Reusable Hand Gloves, Reflect Jacket மற்றுறும Mouth Mask ISI போன்ற உபகரணங்கள் தமிழ்நாடு அரசு நிறுவனமான SIDCO, சென்னை நிறுவனத்தில் விலைப்புள்ளி பெற்று நேரடியாக கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.2,00,000/- க்கு அவசர அவசியம் கருதி போர்கால அடிப்படையில் பணிபுரியவும், தமிழ்நாடு மாவட்ட நகரரட்சி சட்டம் 1920 பிரிவு 15இன் கீழ் செலவினம் மேற்கொள்ளவும், ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கும் கூட்டப்பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

கூட்டப் பொருள் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 212 நாள் 29.05.2020
அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.23</u>**

